பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
20 01 2025 **MONDAY 7.15 PM**
ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- இந்தியாவின் பொருளாதார சீர்திருத்தங்கள் காரணமாக, ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம், விரைவில் எட்டு சதவீதமாக உயரும் என்று உலக பொருளாதார அமைப்பு கணித்துள்ளது.

- தில்லி சட்டப்பேரவைக்கு அடுத்த மாதம் 5-ஆம்தேதி நடைபெறவுள்ள தேர்தலில் 719 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

- கொல்கத்தாவில் பெண் பயிற்சி மருத்துவர் பாலியல் வன்கொடுமை மற்றும் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் சஞ்சய் ராய்-க்கு ஆயுள் தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

- உத்தராகண்ட் மாநிலத்தில் குடியுரிமைத் திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அம்மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

- அமெரிக்க அதிபராக திரு டொனால்டு ட்ரம்ப் இன்று பதவியேற்கிறார்.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<>>>>

இந்தியாவில் மேற்கொள்ளப்பட்டுவரும் பொருளாதார சீர்திருத்தங்கள் காரணமாக, ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம், விரைவில் எட்டு சதவீதமாக உயரும் என்று உலக பொருளாதார அமைப்பு கணித்துள்ளது.

சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் இந்த அமைப்பின் ஆண்டு கூட்டம் இன்று தொடங்கியது.

கூட்டத்திற்கு இடையே தொலைக்காட்சி ஒன்றுக்கு பேட்டியளித்த அந்த அமைப்பின் தலைவர் திரு Boge Brende, இந்திய பொருளாதாரம் வேகமான வளர்ச்சியை அடைந்து வருவதாக தெரிவித்தார்.

நடப்பாண்டில் ஆறு சதவீதமாக உள்ள வளர்ச்சி விகிதம், விரைவில் ஏழு முதல் எட்டு சதவீதமாக உயரும் என்று அவர் கூறினார்.

130 நாடுகளை சேர்ந்த மூவாயிரத்திற்கும் மேற்பட்ட பிரதிநிதிகள், பங்கேற்றுள்ள இந்த கூட்டத்தில், இந்தியா சார்பில் மத்திய அமைச்சர்கள் திரு அஷ்வினி வைஷ்ணவ், திரு சி ஆர் பாட்டீல், திரு ராம்மோகன் நாயுடு, திரு சிராக் பாஸ்வான், இணையமைச்சர் திரு ஜெயந்த் சௌத்ரி ஆகியோர் கலந்துகொண்டுள்ளனர்.

<<<<<>>>>

தில்லி சட்டப்பேரவைக்கு அடுத்த மாதம் 5-ஆம் தேதி நடைபெறவுள்ள தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் இறுதிப்பட்டியலை தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.

வேட்புமனுக்களை திரும்பப் பெறுவதற்கு கடைசி நாளான இன்று, மாலை வெளியிடப்பட்ட இறுதி வேட்பாளர் பட்டியலின்படி, 719 பேர் களத்தில் உள்ளனர்.

70 உறுப்பினர்களைக் கொண்ட தில்லி சட்டப்பேரவைக்கு அடுத்த மாதம் ஐந்தாம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

இதனிடையே, தமிழகத்தில் ஈரோடு கிழக்கு சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில் இன்று வெளியிடப்பட்ட இறுதி வேட்பாளர் பட்டியலில் மொத்தம் 47 வேட்பாளர்கள் போட்டியிடுவதாக தேர்தல் நடத்தும் அதிகாரி தெரிவித்துள்ளார்.

தில்லி சட்டப்பேரவைத் தேர்தலோடு, உத்திரபிரதேச மாநிலம் மில்கிப்பூர் சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலும் நடைபெறுகிறது.

இந்த தேர்தலில் பதிவாகும் வாக்குகள் அடுத்த மாதம் 8-ஆம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் வெளியிடப்படும்.

<<<<<>>>>

தில்லி சட்டப்பேரவைத் தேர்தல் அறிவிக்கப்பட்டதிலிருந்து தேர்தல் விதிமுறைகளை மீறியதாக 397 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக, தில்லி காவல்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், உரிமம் பெறாத 212 ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாகவும், 15 கோடி ரூபாய் மதிப்பிலான 36 ஆயிரம் லிட்டர்

மதுபானங்கள் மற்றும் 75 கிலோ போதைப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இதுவரை 14 ஆயிரம் பேரை காவல்துறையினர் கைது செய்திருப்பதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

<<<<<>>>>

அமெரிக்கா சென்றுள்ள வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர், ஆஸ்திரேலியா மற்றும் ஜப்பான் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களை சந்தித்து இருதரப்பு பேச்சுக்கள் நடத்தினார்.

குவாட் அமைப்பில் இடம்பெற்றுள்ள நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பு மற்றும் முன்னேற்றம் குறித்து அப்போது தாம் விவாதித்ததாக திரு ஜெய்சங்கர் சமூக வலைதள பதிவில் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபராக திரு டொனால்டு ட்ரம்ப் இன்று பதவியேற்க உள்ள விழாவில், ஜெய்சங்கர் பங்கேற்கிறார்.

இதைத்தொடர்ந்து, குவாட் அமைப்பு நாடுகளின் முதலாவது வெளியுறவு அமைச்சர்கள் கூட்டம் நாளை நடைபெறும் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<<>>>>

கொல்கத்தாவில் முதுநிலை பெண் பயிற்சி மருத்துவர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட வழக்கில் முக்கிய குற்றவாளியான சஞ்சய் ராய்-க்கு ஆயுள் தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இந்த வழக்கில் சஞ்சய் ராய் குற்றவாளி என்று கடந்த வாரம் நீதிபதி திரு அனிர்பன் தாஸ் உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையில், சஞ்சய் ராய்-க்கு ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பளித்த நீதிபதி, உயிரிழந்த பெண் மருத்துவரின் குடும்பத்திற்கு 17 லட்சம் ரூபாயை மேற்குவங்க அரசு வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டார்.

தீர்ப்பு வெளியானதையடுத்து, நீதிமன்ற வளாகத்தில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இதனிடையே, குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை விதித்து நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பை வரவேற்பதாக தேசிய மகளிர் ஆணையம் தெரிவித்துள்ளது.

<<<<<>>>>

உத்தராகண்ட் மாநிலத்தில் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக, அந்த சட்டத்திற்கு அம்மாநில அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

டேராடூனில் நடைபெற்ற அமைச்சரவைக்கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய முதலமைச்சர் திரு புஷ்கர் சிங் தாமி, குடியுரிமைத் திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் தமது அரசு வெளிப்படைத் தன்மையுடன் செயல்படுவதாக கூறினார்.

நாட்டின் பிற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாக உத்தராகண்ட் மாநிலம் இந்த சட்டத்தை அமல்படுத்த இருப்பதாகவும் திரு புஷ்கர் சிங் தாமி தெரிவித்தார்.

<<<<<>>>>

பல்கலைக்கழக மானியக்குழு வெளியிட்டுள்ள வரைவு நெறிமுறைகளை திரும்பப்பெற வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின், மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

மாநிலங்களின் கல்விக்கொள்கைகளுக்கு முரணாக இந்த வரைவு நெறிமுறைகள் உள்ளதாக மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதானுக்கு எழுதியுள்ள கடிதத்தில் முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

'UGC 'வரைவு நெறிமுறைகளை திரும்பப்பெற வலியுறுத்தி தமிழக சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பதையும் முதலமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிஜேபி ஆட்சிப்பொறுப்பில் இல்லாத மாநிலங்களின் முதலமைச்சர்களுக்கும் இந்த கோரிக்கையை வலியுறுத்தி, கடிதம் அனுப்பியுள்ள திரு மு.க.ஸ்டாலின், சம்பந்தப்பட்ட மாநிலங்களின் சட்டப்பேரவைகளில் தீர்மானம் நிறைவேற்றுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<>>>>

காபி உற்பத்தியை அதிகரிக்கவும், வளர்ந்துவரும் உள்நாட்டு மற்றும் சர்வதேச தேவையை பூர்த்தி செய்யவும் இந்திய காபி வாரியம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

ஒருங்கிணைந்த காபி மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம், விளைச்சலை மேம்படுத்துவதுடன், இதுவரை பயிரிடப்படாத பகுதிகளில் காபி சாகுபடியை விரிவுபடுத்துவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதுதவிர, காபி சாகுபடியின் ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதற்கான முயற்சிகளுக்கும் தீவிர கவனம் செலுத்தப்பட்டு வருவதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காபி உற்பத்தியில் இந்தியா உலக அளவில் ஏழாவது பெரிய நாடாக திகழ்கிறது.

<<<<<>>>>

ஜம்மு காஷ்மீரின் பாராமுல்லா மாவட்டம் சோப்பூர் பகுதியில் தீவிரவாதிகள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் ராணுவ வீரர் ஒருவர் உயிரிழந்தார்.

Zaloora Gujjarpati வனப்பகுதியில் தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது, இருதரப்பினருக்கும் இடையே ஏற்பட்ட துப்பாக்கிச்சண்டையில் பலத்த காயமடைந்த ராணுவ வீரர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக பாதுகாப்புப்படையினர் தெரிவித்தனர்.

தீவிரவாதிகளுக்கு எதிராக இந்த பகுதியில் இரண்டாவது நாளாக இன்றும் தேடுதல் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாக அவர்கள் மேலும் கூறினர்.

ராணுவத்தினருடன், ஜம்மு காஷ்மீர் காவல்துறையினரும் இணைந்து அந்த பகுதியை சுற்றிவளைத்து தீவிரவாதிகளை தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>

அமெரிக்காவின் 47-ஆவது அதிபராக திரு டொனால்டு ட்ரம்ப் இன்று பதவியேற்கிறார்.

வாஷிங்டனில் நடைபெறும் நிகழ்ச்சியில், அவருக்கு அந்நாட்டின் தலைமை நீதிபதி திரு ஜான் ராபர்ட்ஸ் பதவி பிரமாணம் செய்துவைக்கிறார்.

புதிய அதிபராக பதவியேற்கவுள்ளதை முன்னிட்டு, வாஷிங்டனில் நடைபெற்ற பேரணியில் உரையாற்றிய திரு ட்ரம்ப், அமெரிக்கா எதிர்கொள்ளும் அனைத்து நெருக்கடிகளையும் விரைந்து எதிர்கொண்டு தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்தார்.

அண்மையில், அமெரிக்க பங்குச்சந்தை மிகப்பெரிய உச்சத்தை எட்டியுள்ள நிலையில், கடந்த 39 ஆண்டுகளில் இல்லாத வகையில், சிறு வணிகம் பாதிக்கப்பட்டிருப்பதை அவர் தமது உரையில் சுட்டிக்காட்டினார்.

அமெரிக்காவில் நீடித்துவரும் கடுமையான குளிர் காரணமாக, பதவியேற்பு விழா உள்ளரங்கில் நடைபெற உள்ளது.

பதவியேற்ற பின்னர் முதல் முறையாக ட்ரம்ப் உரையாற்ற உள்ளார்.

திரு ட்ரம்ப்பை தொடர்ந்து திரு 'J D Vance, துணை அதிபராக பதவியேற்க உள்ளார்.

அமெரிக்க அதிபர்பதவியேற்புவிழாவில், பல்வேறு உலக நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கிறார்கள்.

இந்தியா சார்பில் வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர் கலந்துகொள்கிறார்.

அர்ஜென்டினா அதிபர் Javier Milei, இத்தாலி பிரதமர் Giorgia Meloni, ஈக்வடார் அதிபர் Daniel Nobova, உள்ளிட்ட பல நாடுகளின் தலைவர்களும் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்கவுள்ளனர்.

கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற தேர்தலில், குடியரசு கட்சியின் திரு ட்ரம்ப், ஜனநாயக கட்சி சார்பில் போட்டியிட்ட திருமதி கமலா ஹாரீஸை தோற்கடித்தார்.

<<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆஸ்திரேலிய ஓபன் ஜூனியர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Krissh Tyagi – கசகஸ்தானின் Nurlanuly இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-2, 1-6, 10-4 என்ற செட் கணக்கில், ஆஸ்திரேலியாவின் Cruz Llyton Hewit – குரேஷியாவின் Duje Markovina இணையை வென்றது.

------------

நெதர்லாந்தில் நடைபெற்றுவரும் சர்வதேச செஸ் போட்டியின் இரண்டாவது சுற்று முடிவில், இந்தியாவின் பிரக்னானந்தா மற்றும் குகேஷ் உட்பட ஐந்து பேர் கூடுதல் புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளனர்.

***<<<<<END>>>>***